**விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2014**

விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 ஆந்த திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1994 மார்ச் 09 ஆம் திகதி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்குமிடையே ஏற்படுத்தப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறிப்பிடப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின்

காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னாள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்டிராமை

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்காக திறைசேரிச் செயலாளரினாலும் கமத்தொழில் அமைச்சின் செயலாளரினாலும் 1994 மார்ச் 09 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டுள்ள நம்பிக்கைப் பொறுப்பு உடன்படிக்கையின் பிரகாரம் ‘‘கொவிசெத’’ அதிஷ்டலாபச்சீட்டிலிருந்து கிடைக்கும் வருமானம் மற்றும் அப் பணத்தினை முதலீடு செய்ததிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டி வருமானத்தை கமத்தொழில் சார்ந்த அபிவிருத்தி மற்றும் விவசாயிகளின் சேமநலன் உட்பட 06 நோக்கங்கள் நிறைவேற்றுவதற்காக நிதியம் தாபிக்கப்பட்டிருந்தது. 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎவ்/423 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 3.3 (ஆ) பந்தியின் பிரகாரம் நிதியங்களைப் பேணுவதற்கு நியாயாமான காரணங்கள் இருந்தால் அத்தகைய நிதியம் பாராளுமன்ற அதிகாரச்சட்டத்தின் மூலம் சட்டமாக்கப்படுவதற்கு இயலுமான வகையில் அரச நிதித் திணைக்களத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டும் என சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை பாராளுமன்ற அதிகாரச்சட்டமொன்றினால் சட்டரீதியாக்குவதற்கு 2014 திசெம்பர் 31 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் விடயங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக உரிய சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

| | விபரம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | பெறவேண்டிய குறுங்காலக் கடன் | | |
| (i) | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு (விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்) | 7,923,175 | கடன்பட்டோர் மீதிகளின் பட்டோலைகள் |
| (ii) | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு - சுழற்சி நிதியம் | 44,200,176 | விபரமான பட்டோலைகள் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பெறவேண்டிய நீண்டகாலக் கடன் - விவசாய வங்கிக் கடன் | 9,112,579 | பட்டோலைகள் |
| (இ) | நடைமுறையல்லாப் பொறுப்புகள் - விவசாயிகளின் வைப்புகள் | 697,644 | பட்டோலைகள் |
| (ஈ) | நடைமுறைச் சொத்துக்கள் - சேமிப்புக் கணக்குகள் | 7,241,655 | மீதி உறுதிப்படுத்தல்கள் |
| (உ) | நடைமுறையல்லாப் பொறுப்புகள் - பங்குப் பணம் | 591,965 | பங்குதாரரின் வைப்புக்கள் குறிப்பிட்ட பெயர்ப் பதிவேடு |

## 2.3 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குறுங்காலக் கடனின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த 08 ஆண்டுகளைக் கடந்த 06 கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 13,297,971 தொகையாகக் காணப்பட்டது.

(ஆ) முற்பணங்களின் கீழ் காண்பிக்கப்படும் ரூபா 8,018,388 தொகையான 04 மீதிகள் 09 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாது காணப்பட்டன.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நிதியத்தின் செயற்பாடுகளிலிருந்து வரிக்கு முன்னர் ரூபா 35,779,102 மிகையாக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 11,632,564 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 24,146,538 தேறிய அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. செலவினம் ரூபா 59,724,916 ஆல் அதிகரித்தமை இவ் அதிகரிப்பிற்கு முக்கியமான காரணமாகியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முற்பணம் தீர்க்கப்படுவதிலான தாமதங்கள்

அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்த முற்பண மீதிகளில் முறையே ரூபா 2,821,542 தொகையும் ரூபா 2,743,525 தொகையும் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் இதுவரையிலும் அம்மீதிகள் தீர்க்கப்படாது காணப்பட்டன.

(ஆ) நோக்கத்திற்கு முரணான கொடுப்பனவுகள்

நிதியத்தின் நோக்கங்களுக்கு முரணாக 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 6,866,261 தொகையும் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 882,978 தொகையுமாக ரூபா 7,749,239 தொகை 05 சனாதிபதி மாளிகைகளில் பசுமை வீடுகள் நிர்மாணிப்பதற்கு செலவிடப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் பாதீட்டின் படி ரூபா 24,078,000 நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்ட 14 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதியத்தின் பாதிடப்பட்ட 06 நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஏற்பாட்டுத் தொகை ரூபா 43,289,000 ஆகவும் உள்ளபடியான செலவினம் ரூபா 11,151,669 ஆகவும் இருந்தமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவியாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 5.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 ஆம் ஆண்டிற்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது செயலாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிதிக் கட்டுப்பாடு

(ஆ) நிதியப் பயன்பாடு

(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு